**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்18 -ம் நாள் புதன்கிழமை

**O.S. No.107/2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | காசிநாதன் | கிராமம் | : | ஓகை |
| | | | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| | | | வயது | : | 55 |

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

4 ம் பிரதிவாதி எங்கு குடியிருந்து வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதியை ஏன் வழக்கில் வழக்காடியாக சேர்த்துள்ளேன் என்றால் என்னை வழக்கு சொத்திலிருந்து 4 ம் பிரதிவாதி காலி செய்ய சொன்னதால் சேர்த்துள்ளேன். தாவா சொத்தினை நில அளவையர் வைத்து அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை நான் யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் கணேசன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். சரியாக பெயர் நினைவில்லை. கணேசன் எனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார். தாவா சொத்தில் என்ன வீடு உள்ளது என்றால் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் உள்ள வீடு உள்ளது. அந்த வீட்டின் பழைய கதவு எண் என்னவென்றால் பழைய கதவு எண்.2 புதிய கதவு எண் தற்போது நினைவில்லை. அந்த வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் நானும் எனது குடும்ப மக்களும் இருந்து வருகிறோம். நான் எனது வழக்குரையில் பத்தி 8 ல் - 2 ம் பிரதிவாதி குடவாசல் வட்டாட்சியர் என்னை வழக்கு சொத்திலிருந்து காலி செய்ய கோரி அறிவிப்பு அனுப்பினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய பதிலறிவிப்பில் எனது சூழ்நிலையை 2 ம் பிரதிவாதிக்கு எடுத்து கூறி அறிவிப்பு அனுப்பியுள்ளேன் . நான் குடியிருக்கும் வீட்டில் வடபுறம் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது, கிழக்கு பக்கம் பெண்ணரசி மாடி வீடு உள்ளது, மேற்கில் கோபால்

வீடு உள்ளது, தெற்கில் ஆனந்தி காலிமனை உள்ளது. 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் சுவாதீனத்தை காலி செய்ய கோரி அறிவிப்பு ஏதும் அனுப்பினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை காலி செய்ய வாய்மொழியாகவோ அல்லது எழுத்துபூர்வமாகவோ அறிவிப்பு ஏதும் அனுப்பினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தபால் மூலமாக அறிவிப்பு ஏதும் வந்ததா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதியை நான் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றாலும் நான் 4ம் பிரதிவாதிக்கு மனஉளைச்சல் கொடுத்துள்ளேன் என்றாலும், 4ம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.18 13:35:59 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.